**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்**

**முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ) ஓமலூர்,

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 92/2023**

CNR.No: TNSA100007072023

**வழக்கின் சுருக்கம்**

| **வ. எண்** | **விவரம்** | **உள்ளடக்கம்** |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், தொளசம்பட்டி காவல் நிலையம் குற்ற எண். 225/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i) |
| 2. | எதிரிகளின் விபரம் | A1) திரு.செல்வராஜ் (49/2026), (கூலி),<br>த/பெ.எல்லப்பன்,<br>கரட்டுக்காடு, ஊ.மாரமங்கலம்,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.<br>A2) திரு.முத்துராமன்(29/2026) (கூலி),<br>த/பெ.செல்வராஜ்,<br>கரட்டுக்காடு, ஊ.மாரமங்கலம்,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.<br>A3) திரு.மூர்த்தி (35/2026) (கூலி),<br>த/பெ.செல்வராஜ்,<br>கரட்டுக்காடு, ஊ.மாரமங்கலம்,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். |
| 3. | குற்றச்சம்பவம் நிகழ்ந்த நாள் | 13.11.2022 |
| 4. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 10.12.2022 |
| 5. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தேதி | 10.04.2023 |
| 6. | எதிரிகளை கைது | A1, A2, A3, – 18.11.2022 ம் தேதி எதிரிகள் கைது |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:37 +0530

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்ட நாள் | செய்துள்ளார்கள். |
| 7. | பிணையில் வெளிவந்த நாள் | A1, A2, A3, – 18.11.2022 ம் தேதி எதிரிகள் நிலைய பிணையில் வெளிவந்துள்ளார்கள். |
| 8. | விசாரணையின் தொடக்கம் | 26.05.2023 |
| 9. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் விபரங்கள் | A1) செல்வராஜ் – இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i)<br>A2) முத்துராமன், இ.த.ச பிரிவு 324<br>A3) மூர்த்தி – இ.த.ச பிரிவு 323 |
| 10. | விசாரணை முடிவு | 20.08.2026 |
| 11. | தீர்ப்பு விவரம் | குற்றம்சாட்டப்பட்ட எதிரி A1) செல்வராஜ் என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i)–ன் கீழும், எதிரி A2) முத்துராமன் என்பவர் மீது இ.த.ச பிரிவு 324 –ன் கீழும் மற்றும் A3) மூர்த்தி என்பவர் மீது இ.த.ச பிரிவு 323 –ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)–ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம் (Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 437(A)–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரிகள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும். |
| 12. | வழக்கின் சொத்துகள் | இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 452–ன் கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:44 +0530

| | | |
|---|---|---|
| | | எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. |
| 13. | தீர்ப்பு | தீர்ப்பு உடனடியாக இ–கோர்ட் (e–courts) இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | காலதாமதம் இல்லை |

இவ்வழக்கானது, கடந்த 10.04.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.C.மாதேஸ்வரன் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>தீர்ப்புரை</u>**

**<u>வழக்கின் சுருக்கம்:</u>**

1) சேலம் மாவட்டம், தொளசம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், சாட்சி –1 கலா மற்றும் அவரது பக்கத்து வீட்டை சேர்ந்த செல்வராஜ் குடும்பத்திற்கு இடையே தடவழி நிலப்பிரச்சனை சம்மந்தமாக முன் விரோதம் இருந்த நிலையில் 13.11.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு 1வது எதிரி செல்வராஜ் சாட்சி –1 கமலா என்பவரின் வீட்டின் முன்பு வந்து "ஏண்டி தேடிவயா" உனது மகன் யுவராஜ் வண்டியை வேகமாக ஓட்டுகிறான் உங்க அப்பன் வீட்டு தடமா என்று வாதியை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டியும், சாட்சி –1 கமலா என்பவர் ஏன் தனது மகனை திட்டுகிறாய் என்று கேட்டபோது, அப்படிதாண்டி உனது மகன்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:48 +0530

யுவராஜ் வரட்டும் அவனை அடிக்காமல் விடமாட்டேன் என்று சொல்லி 1வது எதிரி செல்வராஜ் சாட்சி –1 கமலா என்பவரின் கன்னத்தின் மீது கையால் அடித்தும், 3 வது எதிரி மூர்த்தி என்பவர் நெஞ்சு மீது எட்டி உதைத்தும், கையால் அடித்தும், 2 வது எதிரி முத்துராமன் என்பவர் கல்லால் முதுகின் மீது அடித்து காயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி செல்வராஜ் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்துள்ளார். எனவே எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i) ன் கீழ் தொளசம்பட்டி காவல் உதவி ஆய்வாளரால் இறுதியறிக்கை தாக்கல் செய்து, அவ்வாறே வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**<u>நீதிமன்றம் பின்பற்றிய வலியுறுத்து சட்ட வகையங்கள்:</u>**

2) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்ற விசாரணை முறைமைச் சட்டம் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால்,

| எதிரிகள் | பிரிவுகள் |
|---|---|
| A1) செல்வராஜ் | இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i) |
| A2) முத்துராமன் | இ.த.ச பிரிவு 324 |
| A3) மூர்த்தி | இ.த.ச பிரிவு 323 |

3) எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வரைந்து, எதிரிகளிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என மறுத்துரைத்துள்ளார்கள். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டது.

**<u>எதிரிகள் மீதான வழக்கினை மெய்ப்பிக்கும் பொருட்டு:</u>**

4) அரசு தரப்பில், அ.சா.1 கமலா முதல் அ.சா.2 அமுதா வரையிலான



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:51 +0530

சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:**

5) **அ.சா.1 திருமதி. கமலா (புகார்தாரர்) ஆவார்:** தான் ஊ.மாரமங்கலம் கரட்டுக்காட்டில் குடியிருந்து கூலி வேலை செய்து வருவதாகவும், தங்களுக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே தடவழிப்பிரச்சனை இருந்து வந்த நிலையில் 13.11.2022ம் தேதி தனது மகன் யுவராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டுவதாகவும், அப்படி ஓட்டக்கூடாது என்று எதிரி செல்வராஜ் தன்னிடம் சொன்னதாகவும், தான் தன் மகன் மெதுவாக தான் ஓட்டுகிறார் என்று சொன்னேன் என்றும், தங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், சத்தம் கேட்டு பொதுமக்கன் கூட்டமாக கூடிவிட்டார்கள் என்றும், கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தான் கீழே விழுந்து தனக்கு முதுகில் காயம் ஏற்பட்டதாகவும், தான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றதாகவும், அப்போது போலிசார் அங்கு வந்து தன்னிடம் கைரேகை பெற்றார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையது தான் என்றும், அந்த கைரேகை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், தான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள 1வது கைரேகை தன்னுடையது என்று சாட்சியம் அளித்து அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அ.சா.2 திருமதி.அமுதா (புலன்விசாரணை அதிகாரி):** தான் தற்போது தொளசம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.11.2022ம் தேதி உதவி ஆய்வாளராக பணியில் இருந்து ஈஸ்வரன் என்பவரது கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கின் தன்மையை கருத்தின் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் தான்



SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:55 +0530

சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்தும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்தும், பார்வை மகஜர் அ.சா.5 ஆக குறியீடு செய்தும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்தும், ஓமலூர் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்தும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்தும், பின்பு எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(b)–ன் கீழான நடவடிக்கைகள்:**

7) அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து, எதிகளுக்கு பாதகமான சங்கதிகளைத் தனியே தொகுத்து, அதைப் பற்றி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவ, எதிரிகள் அவற்றை பொய்ச்சாட்சிகள் என மறுத்தும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை எனவும் பதில் அளித்துள்ளனர்.

**தீர்வு காண வேண்டிய விவாத வினாக்கள்:**

8) தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கானது, தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால், சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு:**

9) அரசு தரப்பு வழக்கானது, எதிரிகள் வாதியை அசிங்கமாகப் பேசி, அடித்து காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்பதேயாகும்.

10) ஆனால், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திருமதி.கமலா என்பவரின் முதன்மை விசாரணையில், *"தங்கள் இருதரப்பினருக்கும் வாய்த்தகராறு தான் என்றும், சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள் என்றும்,*



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:52:58 +0530

*கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தான் கீழே விழுந்து முதுகில் காயம் ஏற்பட்டது என்றும், தான் சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த போலீசார் தன்னிடம் கைரேகை வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையது தான்"* என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 கமலா என்பவர் **அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் (Hostile Witness)** அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்கவில்லை.

11) மேலும் புகார்தாரரான அ.சா.1 கமலா என்பவரின் சாட்சியம் இவ்வாறாக உள்ள நிலையில், புலன் விசாரணை தொடர்பாக அளிக்கப்பட்ட அ.சா.2 அமுதா என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் மீதான வழக்கினைத் தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மேற்கண்ட சூழ்நிலைகளும், அ.சா.1 கமலா என்பவரின் சாட்சியமும், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்குச் சாதகமாக்கி, அவர்களை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து, மேற்கண்ட பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

**முடிவு:**

13) குற்றம்சாட்டப்பட்ட எதிரி A1) செல்வராஜ் என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i)–ன் கீழும், எதிரி A2) முத்துராமன் என்பவர் மீது இ.த.ச பிரிவு 324 –ன் கீழும் மற்றும் A3) மூர்த்தி என்பவர் மீது இ.த.ச பிரிவு 323 –ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)–ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.

14) குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:53:01 +0530

(Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 437(A)–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரிகள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

15) இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 452–ன் கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:53:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| வரிசை எண். | சாட்சிகள் | சாட்சிகளின் பெயர்கள் | விசாரணை செய்த நாள் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.சே.கமலா | 20.08.2026 |
| 2. | அ.சா.2 | திருமதி.ர.அமுதா | 20.08.2026 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| வரிசை எண். | குறியீடு | குறியீடு செய்யப்பட்ட தேதி | அரசு தரப்பு சான்றாவணங்கள் | குறியீடு செய்யப்பட்ட சாட்சி |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 17.11.2022 | அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 20.08.2026 | அந்த சமாதான மனுவில் உள்ள கைரேகை அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | 17.11.2022 | புகார் வாக்குமூலம் | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | 17.11.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | 17.11.2022 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| 6. | அ.சா.ஆ.6 | 17.11.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| 7. | அ.சா.ஆ.7 | 13.11.2022 | கமலா என்பவருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று ஓமலூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது | அ.சா.2 |
| 8. | அ.சா.ஆ.8 | 17.11.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.2 |



SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:53:08 +0530

எதிரிகள் தரப்பு சாட்சிகள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

**குறிப்பு**

தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:53:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,(மு.கூ.பொ),
ஓமலூர்.

**<u>வழக்கு சுருக்கம்</u>**

<table>
<tr><td>1.</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td colspan="3">எதிரிகள் கைது செய்யப்படவில்லை</td></tr>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">10.04.2023</td></tr>
<tr><td>3.</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு (Sessions Court) ஒப்படைக்கப்பட்ட தேதி</td><td colspan="3">பொருந்தாது</td></tr>
<tr><td>4.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">26.05.2023</td></tr>
<tr><td rowspan="3">5.</td><td rowspan="3">தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>CMP. No.</td><td>Petition</td><td>Result</td></tr>
<tr><td>3211/2026</td><td>Petition u/s.359 of BNSS</td><td>Dismissed</td></tr>
<tr><td>3212/2026</td><td>Petition u/s.348 of BNSS</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="3">6.</td><td rowspan="3">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>P.W.1</td><td>20.08.2026</td><td>Hostile</td></tr>
<tr><td>P.W.2</td><td>20.08.2026</td><td>20.08.2026</td></tr>
<tr><td>7.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">20.08.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>9.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.25 17:53:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்